ELOP : 47 /2023

ம.சா. : 1

பெயர் :தனலட்சுமி

நாள் 12.12.2024

**1 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2022ல் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி தேர்தலில் 9வது வார்டு உறுப்பினராக நான் போட்டியிட்டேன் என்றால் சரி. இதில் என்னை எதிர்த்து போட்டியிட்டது 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் என்றால் சரி. மேற்படி தேர்தல் தமிழ்நாடு உள்ளாட்சி சட்ட விதிகளின்படி நடைபெற்றது என்றால் சரி. இதில் முறைப்படி தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டது என்றால்சரி. வேட்பு மனு தாக்கல செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது என்றால் சரி. வேட்பு மனு பரிசீலணையின்போது அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் முகவர்களும் அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் சரி. ஒரு வேட்பாளர் மீது மற்றொரு வேட்பாளர் மற்றும் அவரது ஏஜெண்டு ஆட்சேபணை தெரிவிக்க வாய்ப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரி. வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ ஆட்சேபணை தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரி. அது போல் வேட்பு மனு பரிசீலணையின்போது 1ம் எதிர்மனுதாரர் மீது ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் வாய் மொழியாக ஆட்சேபணை தெரிவித்தேன். மனுவும் கொடுத்தேன். அந்த ஆட்சேபணை மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பேன். தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசா 2 ஆவணத்தில் உள்ள K. கணேசன் என்பவர் யார் என்றால் எனது உறவினர். அவர் தான் எழுத்து மூலமாக ஆட்சேபணை தெரிவித்துள்ளார் என்றால் சரி. நான் எதுவும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரி. கணேசன் தேர்தலில் போட்டியிடாதவர் என்றால் சரி. அவர் தேர்தல் நீதிமன்றத்தில் எந்த நிவாரணமும் கோர இயலாது என்றால் சரி. அவருடைய கோரிக்கையின் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அவர் என்னுடைய உறவினர் என்பதால் அவருடைய ஆவணத்தை என்னிடம் கொடுத்து வழக்கு போட சொல்லியிருக்கிறார் என்றால் சரி. நானும் ஆணையாளரிடம் மனுக்கொடுத்தேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் அதுபோல் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் அந்த மனு நகலை தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. நான் லிங்கராஜன் வேட்புமனுவை நிராகரிக்க வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ ஆட்சேபணை தெரிவித்ததாக சொல்லும் நிலையில் அதற்கான எந்த ஆவணங்களையோ தரவுகளையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கணசேன் என்ன மனு தேர்தல் ஆணையத்தில் கொடுத்தார் என்றும் அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரி. நான் போட்டியிட்ட வார்டின் மொத்த வாக்குகள் எவ்வளவு என்றால் தெரியவில்லை. எவ்வளவு வாக்குகள் பதிவானது

M-தனலட்சுமி

என்று எனக்கு தெரியாது என்றால் சரி. என்னையும் சேர்த்து மொத்தம் 7 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள் என்றால் சரி. பதிவான செல்லத்தக்க வாக்குகள் 1470 வாக்குகள் என்றால் சரி. அதில் நான் பெற்ற வாக்கு 1 வாக்கு என்றால் சரி. வெற்றி பெற்ற லிங்கராஜன் பெற்ற வாக்கு 650 என்றால் சரி. இந்த வழக்கின் 2ம் எதிர் மனுதார் பெற்ற வாக்கு 580 என்றால் சரி. அவர் என்னுடைய கணவர் என்றால் சரி. நானும் என் கணவர் மாசிலாமணியும் திமுக வைச்சேர்ந்தவர்கள் என்றால் சரி. வெற்றி பெற்ற லிங்கராஜனும் திமுக வை சேர்ந்தவர் என்றால் சரி. என் கணவர் மாசிலாமணியை லிங்கராஜன் 70 வாக்குகள் வித்யாசத்தில் வெற்றிபெற்றதால் அதை பொறுக்க முடியாமல் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என்னுடன் என் கணவர் மாசிலாமணி வந்திருக்கிறார் என்றால் சரி. 1ம் எதிர் மனுதாரர் லிங்கராஜன் ஆளுங்கட்சியை சேர்ந்தவர் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நானும் 2ம் எதிர்மனுதாரர் மாசிலாமணியும் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்என்ற விவரத்தை மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரி. நானும் ஒரு முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் என்றாலும் என் கணவரும் ஒரு முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் என்றால் சரி. வழக்கு போடுவதற்கு விவரங்களை என் வழக்கறிஞரிடம் என் கணவர் தான் சொன்னார் என்றால் சரி. நானும்போய் சொன்னேன். மனுவிலும் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலும் என்ன விவரங்கள் சொல்லபட்டுள்ளது என்று மாசிலாமணிக்கு தான் தெரியும் என்றால் சரி. சாட்சி மீண்டும் எனக்கும் தெரியும் என்று கூறுகிறார். மயிலாடுதுறை நகர்புற உள்ளாட்சி 9வது வார்டுக்கான தேர்தல் முறைப்படி தான் நடைபெற்றது என்றாலும் நான் அப்போது வாயை மூடி மௌனமாக இருந்து விட்டு தற்போது 1ம் எதிர் மனுதாரர் வெற்றியை பொறுக்க முடியாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

M-தனலட்சுமி

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/12/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

12/12/24